# கருவூலம் மற்றும் கணக்குத்துறை

**அனுப்புநர்**

திரு. பா. சீனிவாசன், B.Com., M.A.,
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
விழுப்புரம்.

**பெறுநர்**

ஓய்வூதியர்கள்,
(இணைப்பில் கண்டுள்ளவாறு)

**கா.மு.எண்.9196/2014/K3 நாள். 31/05/2016**

**அய்யா / அம்மையீர்,**

பொருள் : ஓய்வூதியம் - ஓய்வூதியர்கள் கருவூலங்களுக்கு நேரில் வருகை புரிதல் - ஓய்வூதியர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய தகவல்கள் - இணையதளத்தில் வெளியிடுதல் - குறித்து.

பார்வை : இயக்குநர், கருவூல கணக்குத் துறை, சென்னை அவர்களின் கடித எண்.4833/2016/E2, நாள்.22.03.2016

*****

ஓய்வூதியர்கள் பல்வேறு காரணங்களுக்காக ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் கருவூலங்களுக்கு வருகின்றனர். அதில் பெரும்பாலானோர் தங்களது ஓய்வூதியம் மற்ற இதர பலன்கள் குறித்த தகவல்கள் கோருபவர்களே. அத்தகைய ஓய்வூதியர்கள் கருவூலத்திற்கு நேரில் வருவதைக் குறைக்கும் வகையில், அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்களைச் சுருக்கமாக இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

31.5.2016

கருவூல அலுவலர்
விழுப்புரம்.

31.5.2016

1/8

இணைப்பு

ஒய்வூதியர்கள் கருவூலத்திற்கு கீழ்க்கண்ட காரணங்களுக்காக நேரில் வருகின்றனர்

1. முதல் ஒய்வூதியம் பெற ( First payment of pension ).
2. தொகுத்துப்பெற்ற ஒய்வூதிய பிடித்தம் மீள வழங்குதல் (Restoration of Commutation of pension)
3. 80 வயதிற்குமேல் கூடுதல் ஒய்வூதியம் பெறுதல் (Additional pension for 80 years and above)
4. திருத்திய ஒய்வூதியம் பெற (Revised pension payment)
5. ஒய்வூதியர் நலநிதியின் கீழ் உதவித்தொகை கிடைக்கப்பெறாதவர்கள்.
6. மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பணம் கிடைக்கப்பெறாதவர்கள்.
7. ஒய்வூதியர் இறப்பிற்குபின் குடும்ப ஒய்வூதியம் கிடைக்கப் பெறாதவர்கள்.
8. குடும்ப பாதுகாப்பு நிதி கிடைக்கப்பெறாதவர்கள்.
9. மருத்துவக் காப்பீட்டு அடையாள அட்டை கிடைக்கப்பெறாதவர்கள்.
10. ஒய்வூதியம் வரவு வைக்கப்பட்டமைக்குரிய SMS வரவில்லை என புகார் தெரிவிப்பவர்கள்.
11. ஒய்வூதிய மாற்றல் கோரும் விண்ணப்பத்தின் நிலையினை அறியவேண்டி வருபவர்கள்.
12. தற்காலிக ஒய்வூதியம் (Provisional pension) கிடைக்கப் பெறாதவர்கள்.
13. வருமானவரி பிடித்த படிவம் 16 கோரி வருபவர்கள்.
14. வருடாந்திர நேர்காணலுக்கு வருபவர்கள்.
15. ஒய்வூதிய மிகை கொடுவை பிடித்தம் தொடர்பாக விபரம் கோருபவர்கள்.

1. முதல் ஒய்வூதியத்திற்காக கருவூலத்திற்கு வருபவர்கள் கவனத்திற்கு

- ஒய்வூதிய கொடுவை ஆணை கருவூலத்தில் பெறப்பட்ட 3 நாட்களுக்குள் ஒய்வூதியருக்கு தகவல் தெரிவித்து கடிதம் அனுப்பப்படும்.
- அக்கடிதத்தில் ஒய்வூதியர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கும். (வங்கி தனிநபர் கணக்கு ஆவண நகல், ஒழுங்கு நடவடிக்கை இன்மைக்கான சான்று, தற்காலிக ஒய்வூதியம் வழங்கப்படாமைக்கான சான்று போன்றவை)
- ஒய்வூதியர் தேவையான ஆவணங்களை அளித்தபின் 7 நாட்களுக்குள் முதல் ஒய்வூதியத் தொகை / ஒய்வூதியம் தொகுத்துப்பெறும் தொகை வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும்.
- சார்நிலைக் கருவூலத்திற்கு ஒய்வூதிய கொடுவை ஆணைகள் 3 நாட்களுக்குள் அனுப்பப்பட்டு, ஒய்வூதியருக்கு தகவல் தெரிவிக்கப்படும்.
- ஒய்வூதிய கொடுவை ஆணை வரப்பெற்று 15 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ளவற்றின் பட்டியல் மாவட்ட இணையதளத்தில் 15 நாட்களுக்கு ஒருமுறை வெளியிடப்படுகிறது. (மாவட்ட இணையதள முகவரி ----------)
- ஒரு மாதத்திற்கு மேல் நிலுவையில் உள்ள பணிகொடை ஆணைகள் மற்றும் பொது வைப்பு நிதி இறுதிப்பெறுகை ஆணைகளின் விபரங்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் மாவட்ட இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன.
- மாநில கணக்காய்வாளருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, ஒய்வூதிய கொடுவை ஆணை பெறப்படாத நிகழ்வுகளில், அதன் தற்போதைய நிலையினை, மாநில